# நாட்டியக்கலாமணி வசந்தா டானியல்

ஆழத்து முத்துக்கள் 157

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இம்மாத ஆழத்து முத்துக்கள் பகுதியில் யாரைப் பற்றி எழுதலாம் என்று யோசித்த போது அதற்கு இலகுவாகப் பொருந்தி வந்தவர் நாட்டியக்கலாமணி வசந்தா டானியல் அவர்கள். தான் முறைப்படி பயின்ற பரதநாட்டியத்தின் மூலம் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்தியவர்களில் முதன்மையானவர். நேரிய சிந்தனை, தன்னம்பிக்கை, சீரிய ஆற்றல், இவற்றுடன் துணிவு மிக்க ஒருவர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இளையதம்பி தேவேந்திரசிங்கம் பியுவல் மற்றும் கண்டியைச் சேர்ந்த தென்னக்கோன் முதியான் சிலாகே பேபிநோனா இணையரின் மகளாக வசந்தாதேவி என்ற வசந்தா பிறந்தார். சங்கீதத்திலும் புல்லாங்குழல் இசையிலும் தேர்ச்சிபெற்ற இவரது தந்தையார் மகளைக் கலைத்துறையில் ஈடுபடுத்தியதில் வியப்பேதும் இல்லை. வாழ்வின் நெறிமுறைகளைக் கற்றுத் தேர்வதற்காகவே அன்றி கலையை வியாபாரப் பொருளாக்கக் கூடாது என்ற கோட்பாட்டில் வளர்ந்த பரம்பரையைச் சேர்ந்தவர். வேலை செய்யும் இடத்தில் தமிழில் தான் கையெழுத்து இடுவேன் என்று உரிமைகளுக்காகப் போராடுபவராகவும் தமிழுணர்வு மிக்கவராகவும் இவரது தந்தையார் இருந்த காரணத்தினால் பெண் விடுதலை, பெண் சுதந்திரம் மற்றும் சமூக சீர்கேடுகள் களைதல் போன்றவற்றுக்காக வசந்தா டானியல் குரல் கொடுத்து வந்துள்ளார்.

கந்தப்பளை மெதடிஸ்த பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்ற வசந்தா டானியல் 1958ல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து சாவகச்சேரிக்கு குடும்பத்தாருடன் குடிபெயர்ந்தார். யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் பயின்ற இவர், கல்லூரியில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதுடன் கல்லூரியின் வலைப்பந்தாட்ட, பாட்மின்டன் அணிகளிலும் தெரிவாகித் தன் தடங்களைப் பதிக்க ஆரம்பித்தார்.

பிரபல நடன ஆசிரியர் திரு. ஏரம்பு சுப்பையா மற்றும் திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தன் ஆகியோரை ஆரம்பக் குருவாக ஏற்று இவர் நடனம் பயில ஆரம்பித்த போது இவருக்கு வயது ஒன்பது. பரதநாட்டியத்தின் மீது ஏற்பட்ட அதீத ஆர்வம் காரணமாக மிக இளவயதிலேயே இந்தியா சென்று பத்மஸ்ரீ K.N. தண்டாயுதபாணிப்பிள்ளை அவர்களிடம் குருகுலவாசம் மூலம் முறைப்படி நாட்டியத்தின் சகல நுணுக்கங்களையும் கற்றுத் தேர்ந்தார். கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவராக இருந்த போதிலும், அந்நாட்களில் தான் இந்து சமயம் குறிந்த ஆழமான பார்வை தனக்குக் கிடைத்ததாகக் குறிப்பிடுகிறார். நாட்டியம் மட்டுமல்லாது நட்டுவாங்கம், நடன அமைப்பு, இசையின் நுணுக்கங்கள், ஒளியமைப்பின் பயன்பாடு போன்ற நாட்டிய நிகழ்வொன்றின் சகல பக்கங்களையும் மிகவும் நேர்த்தியாக ஆசிரியர் தண்டாயுதபாணிப்பிள்ளை அவர்களிடம் கற்றுக் கொண்டார்.

இந்தியாவில் ஆசிரியரிடம் பயின்ற நாட்களில் சக மாணவிகளில் ஒருவரான, இன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் மேடையேற்றிய 'காவிரி தந்த கலைச்செல்வி' என்ற நாட்டிய நாடகத்திலும் நடிகை ஸ்ரீவித்யா போன்றவர்களுடனுன் இணைந்து ஆசிரியர் தண்டாயுதபாணிப் பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் 'குறவஞ்சி' நாட்டிய நாடகம் போன்ற பல நடனங்களில் இவர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

குருகுலவாசம் மூலம் பரதநாட்டியமும் நட்டுவாங்கமும் பயின்ற இவர் அதில் டிப்ளோமா பட்டம் பெற்றதோடு குருவினால் 'நாட்டியக்கலாமணி' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1968ல் நாடு திரும்பிய இவர் தனது 17வது வயதில் பரதநாட்டியத்தில் அரங்கேற்றம் செய்தார். போதகர் ஜெயசிங்கம் அவர்கள் தலைமையில் நுணாவில் மெதடிஸ்த தேவாலயக் கட்டட நிதிக்காக இவரது அரங்கேற்றம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து மே 05, 1968 அன்று நாட்டியக்கலாலயம் என்ற நாட்டியப் பாடசாலையை சாவகச்சேரியில் வசந்தா டானியல் ஆரம்பித்தார்.

கலை, விளையாட்டு மட்டுமல்லாது தனது இரு பெண் பிள்ளைகளுக்கும் வீரத்தையும் தமிழ் உணர்வையும் இவரது தந்தையார் ஊட்டி வளர்த்தார். சிறு வயதிலேயே மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுத்ததுடன் துப்பாக்கி சுடுதல் பயிற்சியையும் அவர் பிள்ளைகளுக்கு வழங்கியிருந்தார். 1969ல் சொலமன் குணம் டானியல் என்பவரைக் காதல் திருமணம் செய்து கொண்ட இவருக்கு ஏர்னஸ்ட் ஜெயபாலன், சொலமி பிரியதர்ஷினி என்ற இரு பிள்ளைகள் உள்ளனர்.

பின்னர் கணவனின் வேலையின் நிமித்தம் உகண்டா நாட்டுக்குச் சென்ற இவர் அந்நாட்டுச்சிறுவர்களுக்கும் நடனம் கற்பித்தார். அங்கு பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் அளித்திருந்தார். அங்குள்ள கரோமாஜா என்ற ஊரில் வரட்சி நிதிக்காக அரசாங்கம் நடத்திய நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார். நாடு திரும்பிய இவர் மீண்டும் நாட்டியக்கலாலயத்தைத் தொடர ஆரம்பித்தார்.



இந்நாட்களில் ரேடியோ வெரித்தாஸ் நிலையத்தினருக்காக 'சிலுவைப்பாதை' என்ற நாட்டிய நாடகத்தைத் தயாரித்து அளித்ததோடு அதில் யேசுவாகவும் வசந்தா டானியல் நடித்திருந்தார். இதே போல் இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சிக்காக 'யேசுவின் பிறப்பு' என்ற நாட்டிய நாடகத்தையும் ஆக்கியிருந்தார். இவரது 25 மாணவிகள் இந்நாட்டிய நாடகத்தில் பங்குபற்றியிருந்தனர். மேலும் இணுவில், மருதனார்மடம் கிறிஸ்தவ ஆச்சிரமத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்துக்காக போதகர் தினகரனின் பாடல்களுக்கு நடனம் அமைத்து புதுமை செய்தார். இந்தியாவிலிருந்து வந்து நிகழ்ச்சியில் பங்குபற்றிய போதகர் தினகரன் 'இவ்வாறு தனது பாடல்கள் உயிர்பெறும் என்று ஒரு போதும் நினைத்திருக்கவில்லை' என தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இதே காலகட்டத்தில் பல்வேறு நடனங்களையும் அறியும் நோக்கில் பிரபல சிங்கள நடனமேதையான வஜீரா சித்திரசேனா அவர்களிடம் கண்டிய நடனத்தையும் இவர் கற்றுக்கொண்டார். இதன் அடியொற்றி நாட்டியக்கலாலயத்துக்காக மதங்களின் தத்துவங்களை விளக்கும் 'தயை' என்ற நாட்டிய நாடகத்தை இவர் அரங்கேற்றினார்.

நாட்டியக்கலாலயத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மாணவியாகச் சேர்த்துக் கொண்டதால் பெரும் இன்னல்களுக்கு ஆளானார். இவ்வாறு சமுதாய நன்னெறிகளைக் கற்றதோடு நில்லாது அதனைச் செயலிலும் காட்டி வருபவர் வசந்தா டானியல். இதனது நீட்சியாக, தன்னிடம் நடனம் பயின்ற மாணவிகளுடன் ஊர் ஊராகச் சென்று தமிழுணர்வு மிக்க நாட்டியங்களை நிகழ்த்தினார். இக்காலகட்டத்தில் இவரது வீடு இராணுவத்தால் தீக்கிரையாக்கப்பட்டது. மிகுந்த நெருக்குவாரத்துக்கு மத்தியில் அவசர அவசரமாக நாட்டை விட்டு வெளியேறி மாலைதீவில் இவர் தஞ்சம் புகுந்தார். அங்குள்ள முஸ்லிம் பிள்ளைகளுக்கும் பரதம் பயிற்றுவித்ததுடன் இவர் மாலைதீவு தேசிய கலாச்சார அணியினருக்காக ஒரு நடனத்தையும் அமைத்துக் கொடுத்திருந்தார்.

1986 மார்கழியில் கனடாவுக்குக் குடியெர்ந்த வசந்தா டானியல் இங்கும் நாட்டியக்கலாலயத்தை ஆரம்பித்து பல மாணவிகளுக்கு அரங்கேற்றம் செய்வித்தார். ஆயினும், அரங்கேற்றத்தை மையப்படுத்தி மாணவர்களைத் தயார்ப்படுத்தும் வழமையில் இருந்து மாறுபட்டு நட்டுவாங்கம், பாடல் மற்றும் பக்கவாத்தியங்களிலும் சிறப்புற அவர்களை வழிநடத்துபவர். இவரைப் போலவே இவரது மாணவர்களும் சமுதாய நெறிகளைப் பின்பற்றி நடக்கலானார்கள்.

வெறும் இதிகாசங்களையும் புராணங்களையும் மட்டும் நாட்டிய நாடகம் ஆக்காது, சமுதாயத்துக்குச் செய்திகள் சொல்லும் நாட்டிய நாடகங்களையே இவர் பெரும்பாலும் மேடையேற்றினர். இயற்கையை அழிவுகளிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதைக் கருவாகக் கொண்ட பஞ்சபூதங்கள், 'Moods and Rhythms of Nature' மற்றும் மனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் 'Reflection of the Soul' மேலும் Secret Daughter என்ற ஆங்கில நாவலைத் தழுவி 'தாய்மை' ஆகிய நாட்டிய நாடகங்களை ஆக்கி, நாட்டியக்கலாலயத்தின் ஆண்டு நிகழ்வில் அரங்கேற்றினார். இவை தவிர பேராசிரியர் சுப்பிரமணியம் எழுதி, இசையமைத்த 'புத்தருக்கு அஞ்சலி' என்ற நாட்டிய நாடகத்தையும் தன் நாட்டியப் பள்ளிக்காக மேடையேற்றினார்.

பல்வேறு அமைப்புகளுக்காக நாட்டிய நாடகங்களை உருவாக்கி மேடையேற்றிய இவர் தமிழர் வகைதுறைவள நிலையத்தினருக்காக ரதன் எழுதிய 'மேழி', சிவரமணியின் கவிதைகளைக் கொண்டு 'சொல்லாத சேதிகள்', திருமாவளவன் எழுதிய 'பெண்' ஆகிய பெண்ணியம் சம்பந்தமான நாட்டிய நாடகங்களை மேடையேற்றியிருந்தார். இவற்றுக்கு ரேணுகா பாலச்சந்திரன் இசையமைப்பு செய்தார்.

கனடாவில் யாழ். இந்துக்கல்லூரி கலைவிழாவுக்காக பொன்னையா விவேகானந்தன் எழுதிய 'ஆன்மபலம்', 'நதிமகள் நர்த்தனம்', 'உயிர்ப்பு', ஹாட்லிக் கல்லூரிக் கலைவிழாவுக்காக 'இனியும் பொறுப்பதோ', தமிழீழச்சங்கத்துக்காக 'விடுதலை', 'சுதந்திர தாகம்', 'பாரதியார் பாடல்கள்', உலகத் தமிழர் இயக்கத்துக்காக 'திலீபன் நினைவு' போன்ற நாட்டிய நாடகங்களை இவர் மேடையேற்றினார்.

இவை தவிர, விவேகானந்த சபையினருக்காக 'விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு' என்ற நாட்டிய நாடகத்தையும் வசந்தா டானியல் வழங்கியிருந்தார். ஏழு மொழிகளில் அமைந்த இந்நாட்டியத்தில் 65 மாணவிகள் பங்கேற்றிருந்தனர். மேலும் யோர்க் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அம்பேத்கரின் நினைவு விழாவில் 70 மாணவிகளைக் கொண்டு இவர் அமைத்த நடனம் வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகளால் பாராட்டப்பெற்றதும், இந்நடனத்துக்கான இசை ஹொலிவூட்டில் பதிவாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்நாட்டிய நாடகத்தின் பெயர் Foot prints he left behind.

இவற்றின் உச்சமாக இசையை மையமாகக் கொண்ட மிகக் கடினமான 'ராகம் தானம் பல்லவி' என்ற இவர் அமைத்த நடனம் இன்னொரு பரிமாணத்துக்கு இவரை இட்டுச்சென்றது. ஏனெனில், ராகம் இசைக்கப்படும் போது அதில் தாளம் இருக்காது. தாளம் இல்லாமல் குழுவாக இந்நடனத்தை ஆடுவது சுலபமான ஒன்றல்ல. இந்த முயற்சியை முதன்முறையாகச் செய்தவர் அடையாறு லஷ்மணன் அவர்கள். அவருக்குப் பின்னர் இவ்வாறான முயற்சியைச் செய்த பெருமை வசந்தா டானியலுக்கு உண்டு.

பந்தநல்லூர் பாணியை தனது பரதநாட்டியத்தில் மேற்கொண்டாலும் இவர் தனது நாட்டிய நாடகத்தில் ஒடிசி, கதக், கதகளி, குச்சிப்பிடி, கண்டிய நடனம் போன்ற நடன வடிவங்களையும் உள்ளடக்கினார். 'வானவில்' நிகழ்ச்சிக்காக மேடையேற்றிய 'சிற்பக் கூடத்தில் ஒருநாள்' மற்றும் சமஉரிமை இயக்கத்தினருக்காக மேடையேற்றிய 'யாவரும் கேளிர்' என்பன அவரது நாட்டியத் தேடலை அறியச் செய்தன. 'யாவரும் கேளிர்' நாட்டிய நாடகத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட கவிதாவரிகளுக்கு நடனம் அமைக்கப்பட்டிருந்தது. தமிழ்க்கவிதையை ஒளவையும் ஆங்கிலக் கவிதையை மாயா அஞ்சலோவும் யாத்திருந்தனர்.

தான் பயின்ற நடனத்தை சமூக மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திய வசந்தா டானியல் அவர்களுக்கு சுயாதீன கலைத் திரைப்படக் கழகத்தின் அகேனம் வாழ்நாள் சாதனையாளர் விருது, கனடா - தென்மராட்சி மன்றத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது, பாண்டிச்சேரி கலை இலக்கிய மன்றத்தின் நாட்டிய சேவைக்கான விருது, சுற்றாடல் துறை அமைச்சின் சிறந்த நடன ஆசிரியைக்கான விருது, முருகன் கோவில் சபையினரின் சிறந்த நடன ஆசிரியைக்கான விருது என்பன கிடைத்துள்ளன.

நாட்டியத்தில் புதுமைகள் செய்து, சொல்லாத பல சேதிகளைச் சொன்ன நாட்டியக் கலாமணி வசந்தா டானியல் அவர்களை பெண்கள் நாள் சிறப்பிதழில் பதிவு செய்வதில் தாய்வீடு பெருமை கொள்கிறது.



sriskandan@thaiveedu.com